# பதவிகள் வெற்றிடம்
# பதிவாளர்நாயகம் திணைக்களம்
# தமிழ் மொழி பிறப்பு , இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய / பொது) பதிவாளர் பதவி
# பதுளை...... மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு , இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல்வேண்டும்.

02. இந்த பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது வருடங்கள் 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்படக.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்திப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல் வேண்டும்.
கருத்திற் கொள்ளவும்- க.பொ.த(சா.த) அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம்சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்தி சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக் கொள்ள இயலும்.

09. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் ( அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப்தளத்திலிலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026/06 மாதம் 08.... ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

S. Jalatheepan
Registrar General
Registrar General's Department
234/A3, Denzil Kobbekaduwa Mawatha,
Koswatta, Battaramulla.

ச. ஜலதீபன்
பதிவாளர் நாயகம்

2026.....04..... மாதம் .....23..... ஆம் திகதி,
பத்தமுல்லை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, இல.234/ ஏ3,
பதிவாளர் நாயகம் திணைக்களத்தில்.

## அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஊவா பரணகம | தெஹிவினி மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை. |
| பதுளை | பசறை | யடிகிந்த (உடகம கிழக்கு மற்றும் உடகம மேற்கு) பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை. |
| பதுளை | வெலிமடை | நெதுன்கமுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை. |
| பதுளை | ஹாலிஎல | மாளிகாதென்னை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை. |